## பரந்தூர் விமான நிலையம் - ஒரு திட்டத்தின் கதை அல்ல;

# தமிழ்நாட்டின் அடுத்த தலைமுறை வளர்ச்சிக்கான கேள்வி!

பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை தமிழ்நாடு அரசு கைவிட்டிருக்கும் நிலையில், முன்னாள் தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சட்டமன்ற வளாகத்திற்கு வெளியே எழுப்பிய இந்தக் கேள்வி, இன்று தமிழ்நாடு முழுவதும் விவாதிக்கப்பட வேண்டிய கேள்வியாக மாறியிருக்கிறது.

**விமான நிலையத் திட்டம் வேண்டுமா, வேண்டாமா?** என்பது மட்டுமே இப்போது கேள்வி அல்ல. ஏற்கெனவே பல ஆண்டுகளாக நடைபெற்ற ஆய்வுகள் என்னவாகும்? திட்டமிடலில் செலவிடப்பட்ட மக்கள் வரிப்பணம் என்னவாகும்?

நிலம் கொடுத்த மக்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீடு என்னவாகும்? ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் எதிர்காலம் என்ன?

மிக முக்கியமாக - **சென்னைக்கு இரண்டாவது சர்வதேச விமான நிலையம் தேவை என்ற அடிப்படைத் தேவை மாறிவிட்டதா?**

இவை அனைத்துக்கும் பதில் தேவை.

**“பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை கைவிடுவது மாற்றம் அல்ல; தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஈடுசெய்ய முடியாத பின்னடைவு” என்று முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்.**

அந்த வார்த்தைகளில் அரசியல் விமர்சனம் மட்டுமல்ல; ஒரு பொருளாதார எச்சரிக்கையும் இருக்கிறது. தமிழ்நாடு மின்னணு உற்பத்தி, ஆட்டோமொபைல், ஏற்றுமதி, தொழில்துறை முதலீடு ஆகியவற்றில் முன்னணியில் நிற்கிறது. இத்தகைய தொழில்களுக்கு உலகத் தரமான விமானப் போக்குவரத்து உள்கட்டமைப்பு தேவை. ஒரு புதிய இடத்தைத் தேடுவது என்பது ஒரு காகிதத்தில் புதிய இடத்தைத் தேர்வு செய்வது மட்டும் அல்ல. மீண்டும் ஆய்வு, நிலத் தேர்வு, நிலம் கையகப்படுத்துதல், இழப்பீடு, மறுவாழ்வு, சுற்றுச்சூழல் அனுமதி, தொழில்நுட்ப ஆய்வு, மத்திய அரசின் ஒப்புதல் என பல ஆண்டுகள் எடுத்துக்கொள்ளக் கூடிய ஒரு நீண்ட செயல்முறை. அதற்குள் முதலீடுகள் வேறு மாநிலங்களை நோக்கிச் செல்லக்கூடும். தொழில் வாய்ப்புகள் தாமதமாகலாம். வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் இளைஞர்களின் கனவுகளும் தாமதமாகலாம்.

அதனால்தான் “பரந்தூர் வேண்டுமா, வேண்டாமா?” என்ற குறுகிய கேள்வியைத் தாண்டி, “தமிழ்நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு நாம் எவ்வளவு காலம் காத்திருக்கப் போகிறோம்?” என்ற கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது.

**இது திடீரென்று எடுக்கப்பட்ட முடிவல்ல!**

சென்னைக்கு இரண்டாவது விமான நிலையம் வேண்டும் என்ற தேடல் நேற்று தொடங்கியதல்ல. பல ஆண்டுகளாக பல்வேறு இடங்கள் ஆய்வு செய்யப்பட்டன. ஸ்ரீபெரும்புதூர் உள்ளிட்ட இடங்கள் பரிசீலிக்கப்பட்டன. பின்னர் திருப்போரூர், பரந்தூர், பன்னூர், படாளம் உள்ளிட்ட இடங்கள் ஆய்வு செய்யப்பட்டன. தொழில்நுட்ப மற்றும் செயல்பாட்டுச் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்த பிறகே பரந்தூர் தேர்வு செய்யப்பட்டது. 2022ஆம் ஆண்டு பரந்தூர் புதிய பசுமைவெளி விமான நிலையத்திற்கான இடமாக முன்னெடுக்கப்பட்டது.

அதனால் பரந்தூர் என்பது யாரோ ஒருவரின் தனிப்பட்ட விருப்பத்தில் உருவான திட்டம் அல்ல. **பல ஆண்டுகளாக நடந்த தேடல், ஆய்வு, தொழில்நுட்ப மதிப்பீடு ஆகியவற்றின் தொடர்ச்சியாக உருவான திட்டம்.**

**முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு - திட்டத்தை முன்னெடுத்ததோடு, மக்களிடம் பேசவும் முயன்ற அமைச்சர்**

பரந்தூர் விமான நிலையத் திட்டம் முன்னெடுக்கப்பட்ட காலத்தில் தொழில்துறை அமைச்சராக இருந்த தங்கம் தென்னரசு, விமான நிலையம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அவசியமான உள்கட்டமைப்பு என்று வலியுறுத்தினார். அவரது பார்வையில் விமான நிலையம் என்பது பயணிகளுக்கான வசதி மட்டுமல்ல. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி, ஏற்றுமதி, முதலீடு, வேலைவாய்ப்பு ஆகியவற்றை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய பொருளாதார உள்கட்டமைப்பு. அவர் குறிப்பிட்ட ஒரு முக்கிய பொருளாதாரக் கருத்து கவனிக்கத்தக்கது: **விமானப் போக்குவரத்தில் செலவிடப்படும் ஒவ்வொரு 100க்கும் சுமார் 325 அளவிலான பொருளாதாரப் பயன் உருவாகும்; 100 நேரடி வேலைவாய்ப்புகள் உருவானால் 610 மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும்** என்ற வாதம் அப்போது முன்வைக்கப்பட்டது. அதாவது, **விமான நிலையத்தில் வேலை பெறுபவர்கள் மட்டும் அதன் பயனாளிகள் அல்ல**. அதைச் சுற்றியுள்ள பொருளாதாரமும் வளர வேண்டும்.

**ஆனால் விவசாயிகளின் குரல்?**

இதுதான் தங்கம் தென்னரசு மேற்கொண்ட முயற்சிகளில் முக்கியமான பகுதி.

பரந்தூர் திட்டத்தை எதிர்த்துப் போராடிய ஏகனாபுரம் உள்ளிட்ட கிராம மக்களுடன் அமைச்சர்கள் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தினர். 2022 அக்டோபரில், **முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்** அறிவுறுத்தலின் பேரில் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, தா.மோ.அன்பரசன் ஆகியோர் ஏகனாபுரம் கிராம மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். மக்களின் நிலம், வீடு, வாழ்வாதாரம் ஆகியவற்றைப் பாதுகாப்பது தொடர்பாக முதலமைச்சருடன் ஆலோசிப்பதாக உறுதியளிக்கப்பட்டது. இதைக் குறிப்பிடுவது முக்கியம். ஏனென்றால்,

**“விமான நிலையம் வேண்டும்” என்று அரசு கூறியது மட்டுமல்ல; “அதை எப்படிச் செயல்படுத்துவது? மக்களின் பாதிப்பை எப்படிக் குறைப்பது?” என்ற பேச்சுவார்த்தையும் நடந்தது.**

**இழப்பீடு - வெறும் சந்தை விலை அல்ல**

நிலம் கொடுக்கும் மக்களின் இழப்பை ஈடுகட்டுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. தொழில்துறை அமைச்சராக இருந்த தங்கம் தென்னரசு, பரந்தூர் நிலங்களுக்கு சந்தை மதிப்பை விட பல மடங்கு அதிகமான இழப்பீடு வழங்கப்படும் என்று சட்டமன்றத்தில் தெரிவித்தார். பின்னர் 3 முதல் 4 மடங்கு சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்ட இழப்பீடு குறித்து அரசு அறிவித்தது. பின்னர் திட்டத்தில் நிலம் வழங்குவோருக்கு 3.5 மடங்கு சந்தை மதிப்பு, மறுவாழ்வு குடியிருப்புகள் உள்ளிட்ட பல்வேறு ஏற்பாடுகள் முன்வைக்கப்பட்டன. இதன் பொருள் என்ன?

**நிலம் கொடுத்தவர் வெறும் “இழப்பீடு பெற்றவர்” என்ற நிலையில் நிற்கக் கூடாது.**

அவர் வளர்ச்சியின் பயனாளியாக மாற வேண்டும்.

**அதுதான் நெய்வேலி சொல்லும் பாடம்!**

நெய்வேலி நிலக்கரி சுரங்கம் உருவான போது, நிலம் என்பது ஒரு நிலப்பரப்பு மட்டுமே அல்ல. அந்த நிலத்தின் மீது ஒரு தொழில் உருவானது. தொழிலுடன் வேலைவாய்ப்பு வந்தது. வேலைவாய்ப்புடன் குடியிருப்புகள் வந்தன. குடியிருப்புகளுடன் பள்ளிகள், மருத்துவமனைகள், வணிக நிறுவனங்கள், போக்குவரத்து வசதிகள் வந்தன. ஒரு தொழில் திட்டம் ஒரு நகரத்தின் பொருளாதார அமைப்பையே மாற்றியது. இன்று நெய்வேலியைப் பார்க்கும்போது, அதன் தொடக்ககால நிலப்பரப்பு மாற்றத்தை மட்டும் யாரும் கணக்கிடுவதில்லை.

**அந்தத் திட்டம் எத்தனை தலைமுறைகளின் வாழ்க்கையை மாற்றியது என்பதையும் பார்க்கிறோம்.**

**BHEL - ஒரு தொழிற்சாலை அல்ல; ஒரு தலைமுறையின் சமூக மாற்றம்!**

திருச்சியில் BHEL உருவானதும் இதே வரலாற்றின் மற்றொரு அத்தியாயம். ஒரு தொழிற்சாலை. ஆனால் அதைச் சுற்றி ஒரு பொருளாதாரச் சூழல். நேரடி வேலைவாய்ப்புகள். மறைமுக வேலைவாய்ப்புகள். குடியிருப்புகள். வணிகங்கள். சிறு தொழில்கள். கல்வி. மருத்துவம். போக்குவரத்து. ஒரு தலைமுறைக்கு கிடைத்த வேலை, அடுத்த தலைமுறையின் கல்வியாக மாறியது. **ஒரு பெரிய தொழில் திட்டம் என்பது ஒரு கட்டிடம் அல்ல; அது ஒரு சமூகத்தின் எதிர்காலத்தை மாற்றும் கருவி.**

OFT போன்ற தொழில் நிறுவனங்களும் தொழில்துறை வளர்ச்சியின் இந்தப் பாதையில் தங்களுக்கான பங்களிப்பைச் செய்துள்ளன.

**அப்படியானால் பரந்தூர்?**

பரந்தூர் விமான நிலையத்தை ஏன் வெறும் விமான நிலையமாகப் பார்க்க வேண்டும்? சென்னை-ஸ்ரீபெரும்புதூர்-ஓரகடம் தொழில் வளையம் இன்று தமிழ்நாட்டின் மிக முக்கியமான தொழில் மண்டலங்களில் ஒன்று. ஆட்டோமொபைல். மின்னணு உற்பத்தி. எலக்ட்ரானிக்ஸ். செமிகண்டக்டர். லாஜிஸ்டிக்ஸ். ஏற்றுமதி. இவை அனைத்திற்கும் விரைவான சர்வதேச விமான இணைப்பு மிகப்பெரிய பொருளாதார ஆதாரமாக மாறும். முனைவர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள் தொழில்துறை அமைச்சராக இருந்த காலத்திலும் இதே பார்வையில் பரந்தூர் விமான நிலையம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. 2025 அக்டோபரில் அவர், பரந்தூர் விமான நிலையம் தமிழ்நாட்டின் தொழில்துறை சூழலுக்கான முக்கிய உள்கட்டமைப்பாகவும், ஸ்ரீபெரும்புதூர்-ஓரகடம் உள்ளிட்ட ஏற்றுமதி வழித்தடங்களுக்கு ஊக்கமாகவும் அமையும் என்று கூறினார்.

**முனைவர் டி.ஆர்.பி. ராஜா - திட்டத்தின் அடுத்த கட்டத்தை நகர்த்திய முயற்சி**

தங்கம் தென்னரசு அவர்களுக்குப் பின்னர் தொழில்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற முனைவர் டி.ஆர்.பி. ராஜா, திட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுத்தார். 2025 ஜீன் 4 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பரந்தூர் விமான நிலையத்தின் அடுத்தகட்ட பணிகள் குறித்து நடைபெற்ற முக்கிய ஆலோசனைக் கூட்டத்தில் முனைவர் டி.ஆர்.பி. ராஜா பங்கேற்றார். அப்போது தொழில்துறைத் துறை நிலம் கையகப்படுத்தும் பணியை மேற்பார்வையிட்டு வந்தது. அதாவது,

**திட்டம் அறிவிக்கப்பட்டு அங்கேயே நிற்கவில்லை.**

ஆய்வு, நிலம் கையகப்படுத்துதல், இழப்பீடு, மறுவாழ்வு, சுற்றுச்சூழல் ஆய்வு, தொழில்நுட்பத் திட்டமிடல், முதலீட்டு திட்டமிடல், என அடுத்தடுத்த கட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. 2025 நவம்பர் நிலவரப்படி, 17 கிராமங்களில் சுமார் 1,100 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, நில உரிமையாளர்களுக்கு சுமார் 680 கோடி வழங்கப்பட்டதாக செய்தி வெளியானது.

இதுதான் இன்று எழும் மிகப் பெரிய கேள்வியின் பின்னணி.

**“நிலங்களை என்ன செய்வீர்கள்?”**

இன்று திட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது அரசு மாற்று இடத்தைத் தேடும் என்று அறிவித்திருக்கிறது. சென்னையின் தற்போதைய விமான நிலையத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

சரி. மாற்று இடம் தேடுங்கள். விமான நிலையம் வேறு இடத்தில் அமைக்கப்படட்டும்.

ஆனால் -

**ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட நிலங்களை என்ன செய்வீர்கள்?**

இதுதான் தொழில்துறை முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் எழுப்பிய கேள்வியின் ஆழம்.

அந்த நிலம் எந்த நோக்கத்திற்காக கையகப்படுத்தப்பட்டது?

அதற்காக நிலம் வழங்கியவர்கள் பெற்ற இழப்பீடு என்ன?

அவர்களின் எதிர்காலம் என்ன?

அந்த நிலத்தை வேறு திட்டத்திற்கு பயன்படுத்தினால், அந்தப் புதிய திட்டத்திற்காக விவசாய நிலம், சுற்றுச்சூழல், நீர்நிலைகள் பற்றிய பிரச்சினைகள் வராதா?

**“விமான நிலையம் வேண்டாம்; வேறு திட்டம் போதும்” என்பது மட்டும் போதுமான பதில் அல்ல.**

தொடர்ச்சியாக முன்னாள் தொழில்துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி. ராஜா கூறிய வார்த்தைகள் இன்னும் கவனிக்கத்தக்கவை.

விமான நிலையத் திட்டம் கைவிடப்பட்டது,



**முனைவர் செ.குறிஞ்சிவாணன்**
மாவட்ட ஒருங்கிணைப்பாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி
புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

**“தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கும், உட்கட்டமைப்புக்கும் இன்று மிகப்பெரிய கருப்பு நாள்”** என்று கூறியுள்ளார். மேலும், பரந்தூர் விமான நிலையம் உருவாகியிருந்தால் அது தமிழ்நாட்டின் சொத்தாக இருந்திருக்கும் என்றும், இந்த முடிவு தொழில் வளர்ச்சியோடு சுற்றுலா வளர்ச்சிக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**விவசாயியா? வளர்ச்சியா? - ஏன் இந்தப் போலியான முரண்பாடு?**

விவசாயியின் கண்ணீரை வைத்து வளர்ச்சி கட்டக் கூடாது. அதே நேரத்தில் விவசாயியின் பெயரைச் சொல்லி தமிழ்நாட்டின் எதிர்கால வளர்ச்சியையும் நிறுத்தக் கூடாது. இரண்டுக்கும் நடுவே ஒரு மூன்றாவது பாதை இருக்கிறது.

**விவசாயியைப் பாதுகாத்தபடியே வளர்ச்சியை உருவாக்கும் பாதை.**

நிலம் கொடுக்கும் குடும்பத்தின் குழந்தைக்கு வேலை.

இளைஞர்களுக்கு திறன் பயிற்சி. பெண்களுக்கு தொழில் வாய்ப்பு. குடும்பங்களுக்கு மறுவாழ்வு.

சிறு தொழில்களுக்கு நிதி. கிராமங்களுக்கு தரமான உள்கட்டமைப்பு. நீர்நிலைகளுக்கு பாதுகாப்பு. சுற்றுச்சூழலுக்கு அறிவியல் திட்டமிடல். **இதுதான் சமூகநீதியுடன் கூடிய வளர்ச்சி.** சூழலியல் பாதுகாப்பும் விமான நிலையமும் எதிரெதிரானவை என்ற பிம்பம் உடைக்கப்பட வேண்டும்.

**நிலம் கொடுத்தவர் வளர்ச்சியின் விலையல்ல; முதல் பயனாளி!**

பரந்தூர் திட்டத்தில் இதை ஒரு புதிய கொள்கையாகவே உருவாக்கியிருக்கலாம். நிலம் கொடுத்த குடும்பங்களின் குழந்தைகளுக்கான **“Parandur Development Employment Priority”** போன்ற திட்டம். விமான நிலையம் சார்ந்த துறைகளில் சிறப்பு திறன் பயிற்சி. லாஜிஸ்டிக்ஸ், ஏவியேஷன், ஹாஸ்பிடாலிட்டி, பாதுகாப்பு, பொறியியல் போன்ற துறைகளில் பயிற்சி. சிறு தொழில்களுக்கு முன்னுரிமை கடன். உள்ளூர் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு மையம். நிலம் கொடுத்த குடும்பங்களுக்கு நீண்டகால சமூகப் பாதுகாப்பு. இப்படி இருந்தால் -

**நிலத்தை இழந்த குடும்பம், நாளை வளர்ச்சியைப் பார்த்து பெருமைப்படும் குடும்பமாக மாறும்.**

**திராவிட மாடல் என்றால் இதுதான்!**

திராவிட மாடல் என்றால் வளர்ச்சியை மறுப்பது அல்ல. மக்களை மறந்து வளர்ச்சியைத் துரத்துவதும் அல்ல. **மக்களையும் அழைத்துக்கொண்டு வளர்ச்சியை நோக்கிச் செல்வது.**

ஒருபுறம் தொழில் வளர்ச்சி, மறுபுறம் சமூக நீதி. ஒருபுறம் முதலீடு, மறுபுறம் வேலைவாய்ப்பு. ஒருபுறம் உலகத் தர உள்கட்டமைப்பு, மறுபுறம் நிலம் கொடுத்த குடும்பத்தின் பாதுகாப்பு. ஒருபுறம் விமான நிலையம், மறுபுறம் நீர்நிலைகள்.

**இரண்டையும் இணைப்பதே திராவிட மாடல் வளர்ச்சியின் சோதனை.**

**விமான நிலையம் என்பது விமானத்திற்காக மட்டும் அல்ல!**

ஒரு சர்வதேச விமான நிலையம் வந்தால்- விமானங்கள் மட்டுமா வரும்?

**முதலீடுகள் வரும்.**

**தொழில்கள் வரும்.**

**ஏற்றுமதி வளரும்.**

**லாஜிஸ்டிக்ஸ் வளரும்.**

**சுற்றுலா வளரும்.**

**மருத்துவ சுற்றுலா வளரும்.**

**ஹோட்டல்கள் வளரும்.**

**சிறு தொழில்கள் வளரும்.**

**வேலைவாய்ப்புகள் பெருகும்.**

அதனால் ஒரு விமான நிலையத்தின் பொருளாதாரப் பயனை அதன் விமான நிலைய எல்லைக்குள் கணக்கிட முடியாது. அது சுற்றியுள்ள மாவட்டங்களின் பொருளாதாரத்தை மாற்றக் கூடியது.

**ஒரு ஏக்கரின் இன்றைய மதிப்பா? ஒரு தலைமுறையின் நாளைய மதிப்பா?**

இது தான் நாம் சிந்திக்க வேண்டிய இடம். ஒரு ஏக்கர் நிலத்திற்கு இன்று எவ்வளவு இழப்பீடு? என்பது ஒரு கேள்வி.

ஆனால்,

**அந்த நிலத்தின் மூலம் உருவாகும் வேலைவாய்ப்பு, தொழில், கல்வி, முதலீடு, வர்த்தகம் ஆகியவை அடுத்த 30 ஆண்டுகளில் எவ்வளவு மதிப்பை உருவாக்கும்?**

என்பதும் கேட்கப்பட வேண்டிய கேள்வி. நிலத்தின் விலையை ரூபாயில் கணக்கிட முடியும். ஆனால் ஒரு தலைமுறையின் எதிர்காலத்தை ரூபாயில் மட்டும் கணக்கிட முடியுமா? அதனால்தான் பெரிய திட்டங்களை குறுகியகால அரசியல் கணக்கில் மட்டும் பார்க்கக்கூடாது.

**முன்னாள் அமைச்சர்களின் முயற்சிகளுக்கு இதுதான் நியாயமான மதிப்பீடு**

தங்கம் தென்னரசு அவர்கள் காலத்தில்,

இடத் தேர்வு, மத்திய அரசுடன் ஒருங்கிணைப்பு, திட்டத்தின் பொருளாதார அவசியத்தை வலியுறுத்தல், விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை, அதிக இழப்பீடு, மறுவாழ்வு குறித்து நடவடிக்கைகள் என திட்டத்தின் அடித்தளம் அமைக்கப்பட்டது.

**முனைவர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள் காலத்தில்,**

நிலம் கையகப்படுத்துதல், திட்டத்தின் அடுத்தகட்டப் பணிகள், தொழில் வளர்ச்சியுடன் விமான நிலையத்தை இணைத்தல், முதலீடு மற்றும் ஏற்றுமதி வளர்ச்சிக்கான உள்கட்டமைப்பாகத் திட்டத்தை முன்னெடுத்தல் ஆகிய பணிகள் தொடர்ந்தன.

அதனால் இவர்கள் செய்த முயற்சிகளை ஒரு அரசியல் கட்சியின் திட்ட ஆதரவு என்று மட்டும் பார்க்கக் கூடாது. **தமிழ்நாட்டின் அடுத்த கட்ட பொருளாதாரத் தேவையை முன்னறிந்து உருவாக்கப்பட்ட உள்கட்டமைப்பு முயற்சி** என்ற கோணத்திலும் பார்க்க வேண்டும்.

**இப்போது வரலாறு நம்மைத் திரும்பிப் பார்க்கிறது!**

2026 ஆகஸ்ட் 24 அன்று பரந்தூர் திட்டத்தை கைவிடுவதாக அரசு அறிவித்திருக்கிறது. அதே நேரத்தில் சென்னைக்கு இரண்டாவது விமான நிலையம் தேவை என்பதையும் மறுக்கவில்லை; மாற்று இடத்தைத் தேடப்போவதாகவும், தற்போதைய விமான நிலையத்தை விரிவுபடுத்தப்போவதாகவும் தெரிவித்துள்ளது. அப்படியானால் அடிப்படைத் தேவை மாறவில்லை.

**தேவை இருக்கிறது.** மாறியது இடம் மட்டுமே. அப்படியிருக்க, **பல ஆண்டுகள் ஆய்வு செய்யப்பட்ட இடம், ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட நிலம், செலவிடப்பட்ட பொது நிதி, நிலம் வழங்கிய மக்கள் - இவர்களின் நிலை என்ன?** இந்தக் கேள்விக்கு அரசு விரிவான வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டிய அவசியம் இருக்கிறது.

**பரந்தூர் - ஒரு முடிவல்ல; ஒரு பாடம்!**

பரந்தூர் திட்டத்தை ஆதரிப்பது என்றால் விவசாயிகளின் கவலைகளை மறுப்பது அல்ல. அதேபோல் திட்டத்தை எதிர்ப்பது என்றால் தமிழ்நாட்டின் எதிர்கால விமானப் போக்குவரத்து தேவையை மறுப்பதாகவும் இருக்கக் கூடாது.

நமக்கு தேவை: **விவசாயியும் வேண்டும். வளர்ச்சியும் வேண்டும். நீர்நிலைகளும் வேண்டும். தொழில்களும் வேண்டும். சுற்றுச்சூழலும் வேண்டும். வேலைவாய்ப்பும் வேண்டும். சர்வதேச விமான நிலையமும் வேண்டும்.**

இவற்றை ஒன்றுக்கொன்று எதிரிகளாக நிறுத்தாமல், அறிவியல் மற்றும் சமூகநீதியின் வழியில் இணைப்பதே ஆட்சியின் திறமை.

**நிலம் கொடுத்தவர் வளர்ச்சியின் விலையல்ல!**

நெய்வேலியில் நிலம் ஒரு தொழில் நகரமாக மாறியது. திருச்சியில் BHEL ஒரு தொழிற்சாலையைத் தாண்டி தலைமுறைகளை உருவாக்கியது.

OFT போன்ற நிறுவனங்கள் தொழில் சூழலை உருவாக்கின. அதேபோல் பரந்தூர் விமான நிலையம் உருவாகியிருந்தால், அது ஒரு விமான நிலையத்தைத் தாண்டி **சென்னையின் அடுத்த பொருளாதார வளர்ச்சி மண்டலமாக** மாறியிருக்கக்கூடிய வாய்ப்பு இருந்தது. அந்த வளர்ச்சியில் பரந்தூர் மக்களுக்கே முதல் உரிமை இருக்க வேண்டும். அவர்களின் குழந்தைகள் வேலை பெற வேண்டும். அவர்களின் குடும்பங்கள் தொழில் செய்ய வேண்டும். அவர்களின் கிராமங்கள் வளர வேண்டும்.

அவர்களின் நில இழப்பு, அடுத்த தலைமுறையின் வாய்ப்பாக மாற வேண்டும்.

**“நிலங்களை என்ன செய்வீர்கள்?”**

இது தங்கம் தென்னரசு மட்டும் கேட்கும் கேள்வி அல்ல.

**தமிழ்நாட்டின் வரிப்பணம் கேட்கும் கேள்வி.**

**நிலம் வழங்கிய குடும்பங்கள் கேட்கும் கேள்வி.**

**வேலைவாய்ப்பை எதிர்பார்க்கும் இளைஞர்கள் கேட்கும் கேள்வி.**

**தொழில் முதலீட்டாளர்கள் கேட்கும் கேள்வி.**

**தமிழ்நாட்டின் எதிர்காலம் கேட்கும் கேள்வி.**

ஒரு திட்டம் கைவிடப்படலாம். ஒரு இடம் மாற்றப்படலாம். ஆனால் ஒரு மாநிலத்தின் வளர்ச்சித் தேவையை மட்டும் கைவிட முடியாது.

**சென்னைக்கு இரண்டாவது சர்வதேச விமான நிலையம் தேவை.**

அது எங்கே அமைந்தாலும், **விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும். சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும். நிலம் கொடுத்தவருக்கு நியாயம் செய்ய வேண்டும். அதே நேரத்தில் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கான எதிர்கால வாய்ப்பையும் பாதுகாக்க வேண்டும்.** அதுதான் உண்மையான வளர்ச்சி. அதுதான் சமூகநீதி. அதுதான் திராவிட மாடலின் கோட்பாடு. அதனை நோக்கிய பயனத்தில் அழைத்துச் சென்றவர்களை பின்னோக்கிச் செல்ல வைக்கிறது தற்போதைய அரசு,

ஒரு விமான நிலையத்தின் ஓடுபாதையில் விமானம் ஓடுவது மட்டுமல்ல வளர்ச்சி;

ஒரு விவசாயியின் வீட்டில் இருந்து முதல் தலைமுறை பட்டதாரி உருவாவதும் வளர்ச்சி தான்.

ஒரு கிராமத்து இளைஞனின் கையில் வேலைவாய்ப்பு வருவதும் வளர்ச்சிதான்.

ஒரு தாயின் கண்களில் “என் மகனுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது” என்ற நம்பிக்கை பிறப்பதும் வளர்ச்சிதான்.

தொழிலையும் வளர்ப்போம்! வேலைவாய்ப்பையும் பெருக்குவோம்! உலகத்தோடு தமிழ்நாட்டை இணைப்போம்! நெய்வேலியின் நிலம் தொழில் நகரத்தைப் பெற்றது. திருச்சியின் நிலம் BHELஐப் பெற்றது. OFT போன்ற நிறுவனங்கள் தொழில்துறை அடையாளத்தைப் பெற்றுத் தந்தன. அதேபோல, நாளைய பரந்தூர், ஒரு விமான நிலையமாக மட்டும் இல்லாமல், ஒரு புதிய பொருளாதார நகரமாக, ஒரு புதிய வேலைவாய்ப்பு மண்டலமாக, ஒரு புதிய தலைமுறையின் கனவுகளுக்கான வாசலாக மாற வேண்டும்.

ஒரு நாள்...

பரந்தூரின் ஓடுபாதையில் ஒரு விமானம் வானத்தை நோக்கிப் புறப்படும்போது,

அதைப் பார்த்து ஒரு விவசாயியின் பேரன்,

**“இந்த நிலத்தில் என் தாத்தாவின் வியர்வை இருந்தது...**

**இந்த வளர்ச்சியில் எங்கள் குடும்பத்தின் எதிர்காலமும் இருக்கிறது!”**

என்று பெருமையுடன் சொல்ல வேண்டும். அந்த நாள்தான் உண்மையான வளர்ச்சியின் நாள். அந்த நாள்தான் நிலம் கொடுத்த மக்களுக்கு கிடைக்கும் உண்மையான நீதி. அந்த நாள்தான் தமிழ்நாட்டின் வளர்ச்சி எண்ணிக்கையில் மட்டுமல்ல; மனிதர்களின் வாழ்க்கையிலும் உயர்ந்த நாள்.

விமானங்கள் மட்டும் பறக்க வேண்டியதில்லை...

தமிழ்நாட்டின் இளைஞர்களின் கனவுகளும் பறக்க வேண்டும்!

ஓடுபாதையில் விமானம் புறப்படட்டும்;

அதன் நிழலில் ஒரு தலைமுறையின் எதிர்காலமும் புறப்படட்டும்!

வானத்தைத் தொடும் விமானங்களோடு,

வாழ்க்கையைத் தொடும் வாய்ப்புகளும் பெருகட்டும்!

பரந்தூரின் மண் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான புதிய வானமாகட்டும்!

**நிலம் கொடுத்தவர் வளர்ச்சியின் விலையல்ல - வளர்ச்சியின் முதல் பயனாளி! அது தான் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதை.**

**அதுதான் மக்கள் சார்ந்த வளர்ச்சி.**

**அதுதான் சமூகநீதியின் வளர்ச்சி.**